සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**22 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Ord. Level) Examination, 2020

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය I, II
**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II**
Tamil Language and Literature I, II

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

● **தடித்த எழுத்தில்** அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**1.** 'நித்திலப் புன்னகைச் சுடர் வீசிட......' - இங்கு **நித்திலம்** என்பது
(1) நிலம் (2) மல்லிகை (3) பவளம் (4) முத்து

**2.** 'தேனருவி திரையெழும்பி வானின்வழி யொழுகும்' - இங்கு **திரை** என்பது
(1) அலை (2) மறைப்பு (3) நீர் (4) ஆடை

**3.** 'மஞ்சோனா மரம் மிக அடர்த்தியாய் காற்றுக்குத் தலைவிரித்தாடி ஒய்யாரமாய் நின்றது.' - **அடர்த்தி** என்பதன் எதிர்க்கருத்து
(1) நெருக்கம் (2) ஐது (3) செறிவு (4) நொய்து

**4.** 'சிறுமீன் சினையினும் நுண்ணிதே' - **நுண்மை** என்பதன் எதிர்க்கருத்து
(1) அருமை (2) பருமை (3) சிறுமை (4) வெறுமை

**5.** 'என் மிதமிஞ்சிய பயந்தாங்கொள்ளிப் பட்டத்தை நான் எரித்தாயிற்று' - இங்கு **மிதமிஞ்சிய** என்பதன் பொருள்
(1) அளவுக்கதிகமான (2) மிகப்பெரிய
(3) மிக மோசமான (4) சரியளவான

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

**6.** பின்வருவனவற்றுள் **தொடர்பற்ற** சொற்களின் இணைப்பு
(1) பிரபுக்கள் - குருமார் (2) நீதிபதி - வழக்கறிஞர்
(3) ஆசிரியர் - மாணவர் (4) பெற்றோர் - பிள்ளைகள்

**7.** பொருளால் **வேறுபட்ட** சொற்களைக் கொண்ட தொகுதி
(1) ஞாயிறு, பகலவன், ஆதவன் (2) துயில், உறக்கம், துஞ்சல்
(3) கங்குல், பகல், மதியம் (4) தாரகை, உடு, விண்மீன்

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**8.** மாருதம், பவனம், வளி என்னும் சொற்கள் குறிக்கும் பொருள்
(1) நிலம் (2) நீர் (3) காற்று (4) நெருப்பு

**9.** 'வெப்சைற்' (Website) என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல்
(1) இணையம் (2) வலைத்தளம் (3) மின்னஞ்சல் (4) முகநூல்

**10.** இளமை குறித்த 'பிள்ளை' என்ற மரபுப் பெயருக்குப் **பொருத்தமற்றது**
(1) கீரி (2) தென்னை (3) பனை (4) கமுகு

**11.** 'அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்.' - இங்கு **பரணி** என்பது
(1) புகழ் (2) மெய்க்கீர்த்தி
(3) வம்சாவளி (4) சாசனம்

**12.** எதிர்ப்பொருள் தரும் சொற்களால் அமைந்த இணைமொழி
(1) அரைகுறை (2) ஆதியந்தம் (3) ஆடிப்பாடி (4) அக்கம்பக்கம்

**13.** துன்பங்களைப் பொருட்படுத்தாது, எடுத்த காரியத்தை முடிப்பதற்கு மேற்கொள்ளும் தீவிர முயற்சியை விசேடிப்பதற்கு அடைமொழியாகக் கையாளத்தக்க அருஞ்சொற்றொடர்
(1) அகமும் முகமும் மலர்ந்து (2) அருமை பெருமை அறிந்து
(3) ஊண் உறக்கம் இன்றி (4) நன்மை தீமை நாடி

**14.** அரிச்சுவடியில் உள்ள எழுத்துமுறைப்படி சொற்களை நிரற்படுத்தி, சொற்களின் பொருளைத் தரும் நூல்
(1) நிகண்டு (2) கலைக்களஞ்சியம்
(3) சொற்றொகுதி (4) அகராதி

**15.** கூறவந்த விடயத்தோடு **தொடர்பில்லாத** விடயங்களைக் கூறுதல்
(1) குன்றக்கூறல் (2) மற்றொன்று விரித்தல்
(3) கூறியது கூறல் (4) மிகைபடக் கூறல்

**16.** 'அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?' என்ற பழமொழிக்கு மிக நெருக்கமான பிறிதொரு பழமொழி
(1) ஆறிலும் சாவு நூறிலும் சாவு (2) தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்
(3) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து (4) நாய்வாலை நிமிர்த்த முடியாது

**17.** 'தகுதியற்றவர்களிடம் சேரும் அரும்பொருள் அழிவுக்குள்ளாகும்' என்பதை வலியுறுத்தும் உவமைத் தொடர்
(1) ஆடத் தெரியாதவன் முற்றம் கோணல் என்றது போல
(2) ஆற்றிற் கரைத்த புளி போல
(3) குரங்கின் கைப் பூமாலை போல
(4) காட்டில் எறித்த நிலாப் போல

**18.** 'ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி' என்ற தொடரால் உணர்த்தப்படுவன
(1) செழிப்பும் நிலைபேறும் (2) பசுமையும் இளமையும்
(3) அழகும் இளமையும் (4) உயரமும் ஆழமும்

**19.** 'அழகான நடைவண்டி அசைந்தாடும் கிலுகிலுப்பை' - கிலுகிலுப்பை என்ற சொல்லில் உள்ள **கிலுகிலு** என்பது
(1) இணைமொழி (2) அடுக்குத்தொடர்
(3) இரட்டைக்கிளவி (4) அடுக்கிடுக்குத்தொடர்

**20.** 'நாத் தோம் இல் உரை பதற கதும் என உற்றெழுந்து' - இத்தொடரில் இடம்பெற்றுள்ள விரைவுப் பொருள் தரும் ஒலிக்குறிப்புச் சொல்
(1) தோம் (2) கதும் (3) பதற (4) உற்று

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான** விடையைத் தெரிவுசெய்க.

**21.** ககரம் 'h' என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கும் சொல்
(1) கடல் (2) ஆக்கம் (3) மங்கை (4) ஆகம்

**22.** பின்வருவனவற்றுள் இடைநிலை பெற்றமைந்த பெயர்ப் பகுபதம்
(1) உண்டான் (2) பொங்கும் (3) அறிஞன் (4) அரசன்

**23.** பின்வருவனவற்றுள் பெயரடை
(1) குறைவாக (2) இனிமையான (3) விரைந்து (4) விரைவில்

**24.** பின்வருவனவற்றுள் வேற்றுமைப் பொருளால் வேறுபடும் தொடர்
(1) வான்மதி (2) உச்சித்திலகம்
(3) மணிக்கோபுரம் (4) சுவர்க்கடிகாரம்

**25.** கெடுதல் விகாரம் இடம்பெற்றுப் புணர்ந்தது
(1) ஊர்ப்பெயர் (2) மரவேர் (3) நிலாமுற்றம் (4) மலரிதழ்

**26.** அவன் நீதியுணர்வு உள்ளவன்.
அவன் தவறு செய்யமாட்டான்.
மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் தர்க்கரீதியாக இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
(1) ஆனால் (2) ஆகையால் (3) ஆயினும் (4) எனினும்

**27.** 'காகம்போல் அவன் விழுந்தவளின் வேலி ஓரமெல்லாம் கரைந்து திரிவானோ?'
இங்கு **விழுந்தவள்** என்பது
(1) படர்க்கை வினைமுற்று (2) தொழிற்பெயர்
(3) வினையாலணையும் பெயர் (4) பெண்பால் வினைமுற்று

**28.** அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி
(1) கள்ளம், கபடம், காடு, குரங்கு (2) வரம்பு, வயல், வாசல், வீடு
(3) தப்பட்டை, தப்பு, தாளம், தாரை (4) ஏகம், ஏகாந்தம், ஏகுதல், ஏங்குதல்

- **பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

**29.** (1) வேற்றுமைத்தொகை : மரச்சட்டம், மரவேர், கண்ணீர்
(2) வினைத்தொகை : ஆடுகதிரை, பாடுபொருள், காடுகரம்பை
(3) பண்புத்தொகை : முழுநிலவு, நீண்டபயணம், பழங்குடை
(4) உவமைத்தொகை : தேன்மொழி, மலர்முகம், நெருப்புப்பசி

**30.** (1) தன்மைவினை : வந்தேன், சென்றோம், பார்ப்பேன்
(2) முன்னிலைவினை : செய்வாய், ஓடுங்கள், ஒழிவாய்
(3) படர்க்கைவினை : ஆடுகிறான், ஓடுவான், படித்தான்
(4) வியங்கோள்வினை : வெல்க, ஒழியட்டும், செல்வாய்

- புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

**31.** மாணவர்கள், நாடகத்துறையில் அனுபவ அறிவினைப் பெறுவதற்காக .................... ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
(1) கருத்தரங்கு (2) விரிவுரை (3) செயலமர்வு (4) கலந்துரையாடல்

**32.** 'கலைந்து, அலைந்து, உலைந்து' என .................... அமைந்த சொற்களைக் கவிஞன் தொடுத்தான்.
(1) மோனை (2) எதுகை (3) சிலேடை (4) முரண்

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**33.** பிரபுக்களைப் புகழ்ந்து புலவர்கள் பாடிய பாடல்களிற் பெரும்பாலானவை வெறும் ………………… என்றே கொள்ளத்தக்கன.
(1) கீர்த்தனைகள் (2) மெய்க்கீர்த்திகள் (3) சிற்றிலக்கியங்கள் (4) புனைந்துரைகள்

**34.** "பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கப்படவுள்ள, இந்த ஆண்டுக்கான ………………… ஏழை மக்களுக்குச் சார்பானதாக அமையும்" என்று நிதியமைச்சர் கூறினார்.
(1) பிரேரணை (2) பாதீடு (3) முன்மொழிவு (4) அறிக்கை

- வாக்கியங்களின் முற்பகுதிக்குப் **பொருத்தமான** முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

**35.** உழைக்கும் கரங்கள் உன்னதமானவை என்ற உண்மை ……………………………………………
(1) உணரப்படவேண்டியன (2) உணரத்தக்கவை
(3) உணரத்தக்கன (4) உணரப்படவேண்டியது

**36.** உயர்தரத்திற் பயில்வதற்கு எங்களிற் பெரும்பாலானவர்கள் கணிதத்துறையையும் சிலர் விஞ்ஞானத்துறையையும் நான் கலைத்துறையையும் ……………………………………
(1) தெரிவுசெய்தனர் (2) தெரிவுசெய்தோம்
(3) தெரிவுசெய்தார்கள் (4) தெரிவுசெய்தேன்

- கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

கோவிலில் மணிகள் ஆர்ப்ப
குயிலினம் வரவு கூற
சேவல்கள் சிறகு கொட்டிச்
செகத்தினை விழிக்கச் செய்ய
பாவியர் உள்ளம் போலும்
கங்குலும் பதுங்கிக் கொள்ள
தேவர்க்கும் தேவனான
பகலவன் தேரில் வந்தான்

**37.** இப்பாடல் விவரிக்கும் பிரதான விடயம் யாது?
(1) பகற்பொழுது (2) உலகம் விழிப்படைதல்
(3) சூரியோதயம் (4) காலை நிகழ்ச்சிகள்

**38.** 'செகத்தினை விழிக்கச்செய்ய' என்ற தொடரில் 'செகம்' என்ற சொல்லால் உணர்த்தப்படுவது
(1) வானம் (2) உயிரினம் (3) இரவு (4) பொழுது

**39.** இங்கு கையாளப்பட்டுள்ள உவமையணியின் உவமான உவமேயங்களுக்கு இடையிலான பொதுத்தன்மை யாது?
(1) இருள் (2) ஒளி (3) அழகு (4) செம்மை

**40.** கீழே, சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

அ - எனினும் அவர் கண்ட கனவுகள் இன்னும் நனவாகவில்லை.
ஆ - சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக அவர் குரல் கொடுத்தார்.
இ - அந்த ஏற்றத்தாழ்வுகளும் மூடத்தனங்களும் இன்று அகன்றுவிட்டனவா?
ஈ - மூடத்தனங்களுக்கு எதிராகவும் குரல் கொடுத்தார்.
உ - மகாகவி பாரதியார் மறைந்து நூறு ஆண்டுகள் ஆகின்றன.

(1) உ, இ, ஈ, அ, ஆ (2) உ, ஈ, ஆ, அ, இ
(3) உ, அ, ஆ, ஈ, இ (4) உ, அ, ஈ, ஆ, இ

* *

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# பகுதி II

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) 'கணக்காயரில்லாதவூர்' எனும் சொற்றொடரைப் பிரித்தெழுதுக.

(ii) பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இட்டு, அதனை மீண்டும் எழுதுக.
விலகு பிள்ளை என்று சொல்ல முன்னமே விசுவநாதபிள்ளை விலகி இடங்கொடுத்தார்

(iii) சங்கப்பாடலை வைத்து, கவிஞரால் உருவாக்கப்பட்டதே இந்நாடகம்.
மேலே தரப்பெற்றுள்ள செயப்பாட்டுவினை வாக்கியத்தை செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

(iv) ஒவ்வொரு கலைக்கும் அவற்றுக்கே உரிய சில அடிப்படைப் பண்புகள் உள்ளன.
இவ்வாக்கியத்தை வழுநீக்கி எழுதுக.

(v) - பாரதியார் நவீன கவிதையின் முன்னோடி.
- பாரதியார் பாஞ்சாலி சபதம் பாடினார்.
மேற்படி இரண்டு வாக்கியங்களையும் ஒரு வாக்கியமாக்கி எழுதுக.

(vi) 'அந்த அதிர்ச்சியான செய்தி கேட்டு உலகு கலங்கியது' - இதில் காணப்பெறும் ஆகுபெயரை இனங்கண்டு, அது எவ்வகை ஆகுபெயர் எனவும் குறிப்பிடுக.

(vii) 'அலை' என்ற சொல், பெயராகவும் வினையாகவும் அமையுமாறு ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

(viii) பின்வரும் வாக்கியத்தில் காணப்பெறும் வினையடை யாது?
கரிய பெரிய யானைகள் பயங்கரமாக ஓடின.

(ix) அவன் என்னை நல்லவனாக எண்ணியிருந்தான்.
இந்த உடன்பாட்டு வாக்கியத்தை எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக.

(x) பந்தியின் முதன்மைக் கருத்தை உறுதியாகத் தெளிவுபடுத்தினார்.
இவ்வாக்கியத்தின் செயப்படுபொருள் யாது?

(02 x 10 = 20 புள்ளிகள்)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(i) எமது நாடு சகல இயற்கை வளங்களும் நிறைந்த ஒரு நாடாகும். இன்றைய சூழ்நிலையில் இவ்வளங்களைப் பயன்படுத்திக்கொள்வது மிகவும் அவசியமாகும். விவசாயம், உள்ளூர் உற்பத்தி முதலான துறைகளை விருத்தி செய்வதன் மூலம் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற முடியும். இது தொடர்பான ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ii) மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ள ஊடகங்களுள் தொலைக்காட்சி முக்கியமானதாகும். அதில் பல்வேறு அலைவரிசைகளினூடாக பல்வேறு விதமான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன. அந்நிகழ்ச்சிகளால் நன்மைகளே பெரிதும் ஏற்படுகின்றன எனக் கருதும் ஒருவருக்கும் தீமைகளே பெரிதும் ஏற்படுகின்றன எனக் கருதும் மற்றொருவருக்குமிடையிலான ஒரு **உரையாடல்.**

(iii) சமுதாயத்தில் ஒருவர் உயர்ந்தவராகக் கருதப்படுவதற்கு, பதவி, படிப்பு, பணம் எனப் பல காரணங்கள் உள்ளன. இவற்றுள் ஒன்றோ பலவோ இருப்பதனால் மட்டுமே ஒருவர் உயர்ந்தவராகக் கருதப்படமாட்டார். இவற்றோடு நற்பண்பும் உடைய ஒருவரே பிறரால் மதிக்கப்படுவார். இக்கருத்தை விளக்கும் வகையிலான ஒரு **மேடைப்பேச்சு.**

(iv) இன்று என் வாழ்வில் மறக்கமுடியாத ஒருநாள். கடல்கோளால் என் கிராமம் சிதைந்துவிட, உயிரைக் கையில் பிடித்தபடி ஓடி... ஆறு ஆண்டுகளின் பின் இன்றுதான் என் சொந்த ஊருக்குத் திரும்புகிறேன்... அந்த ... அந்தக் கொடிய நாளை நினைத்தாலே நெஞ்சு பதறும்... - என்ற வகையில் தொடங்கி அனுபவங்களை விவரிப்பதான ஒரு **சிறுகதை.**

**3.** பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

மனிதருக்கு இன்றியமையாமல் இருக்க வேண்டியவை இரண்டு. முதலாவது உள்ளத்து உணர்வு; இரண்டாவது அறிவு. இரண்டும் வளம் பெற்ற ஒருவனே பூரண மனிதனாவான். ஒன்றை வளர்க்காமல் மற்றதை வளர்ப்பதாலே பயனில்லை. அவ்வாறு செய்பவன் முழுமை உடையவன் எனப்படமாட்டான்.

பலமான காற்றடித்தாலும், பிறர் வேகமாகத் தள்ளிவிட நேர்ந்தாலும் இரண்டு கால்களையும் நன்றாக ஊன்றி நிற்பவன் விழமாட்டான். ஆனால், ஒரு காலில் நிற்பவனோ உடன் விழுந்துவிடுவான். அதுபோலவே, உணர்வு, அறிவு என்ற இரண்டு கால்களிலும் நிற்கும் சமுதாயம் ஒருபோதும் விழமாட்டாது. காலம் எனும் பேய்க்காற்றாலும், பிற நாகரிகம் என்ற இடியாலும் தாக்கப்பட்டாலும் அச்சமுதாயம் துளியும் பாதிக்கப்படமாட்டாது. இதற்கு மறுதலையாக, ஒரு காலில் நிற்கும் நிலையேற்பட்ட சமுதாயங்கள் நிலை பெறவில்லை. உணர்வை மட்டுமே பேணிய சமுதாயம் வீழ்ச்சியுற்றது. அறிவையே பெரிதாகக் கருதிய சமுதாயமும் வீழ்ச்சியுற்றது.

மனிதன் அறிவை வளர்ப்பதால் பெறும் பயன்கள் விஞ்ஞானம், அரசியல் முதலியன. இவற்றினால் மனிதனின் புறவாழ்வு சிறப்படைந்தது. வெயிலிலும் மழையிலும் இடருற்ற மனிதன், விஞ்ஞானத்தால் வீடுகட்டி, வண்டி செய்து வாழத் தொடங்கினான். இவையெல்லாம் அறிவின் பயனாக விளைந்தவை. உணர்வின் துணையின்றித் தோன்றிய இவற்றால் ஓரளவு நற்பயன் உண்டு எனினும் தீய பயனும் உண்டு. அறிவை மட்டுமே கொண்டு நடந்த ஆராய்ச்சிகளாலே அணுவைத் துளைக்கும் முயற்சி அணுகுண்டில் போய் முடிந்தது. அறிவோடு உணர்வும் கலந்து வளர்ந்திருந்தால் அணு பற்றிய ஆராய்ச்சி சமுதாய வளர்ச்சிக்கே பயன்பட்டிருக்கும். எனவேதான், சமுதாயத்தில் அறிவோடு உணர்வும் இணைந்து வளர்க்கப்பட வேண்டும் என அறிஞர் அனைவரும் உரத்துக் குரல் கொடுக்கின்றனர்.

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**4.** பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

மனிதன் ஆரம்பத்தில் பச்சை இறைச்சியைத் தின்று பல காலம் வாழ்ந்தான். பின்னர், பல்லாயிரம் ஆண்டுகள் கழித்து விலங்குகளைப் பிடித்துப் பழக்கி, தனக்காக அவற்றை வேலை செய்யப் பழக்கினான். இதற்கும் பல காலம் பின்னர்தான், குடும்பம் எனும் அமைப்பை ஏற்படுத்தி வாழத்தொடங்கினான். அன்பையும் அது காரணமாக விட்டுக்கொடுப்பதையும் இவ்வமைப்பு அவனுக்குப் பழக்கியது. இவ்வமைப்பில் அவனுக்குப் புதிய பல அனுபவங்கள் தோன்றின. ஒரு பெண்ணின் நன்மை, தீமைகளில் பங்குகொள்ளத் தொடங்கியதும், இருவருக்கும் பிறந்த புதிய உயிர்களின் குறும்புகளில் ஈடுபடத் தொடங்கியதும், அவனுக்குப் புதியனவாக இருந்தன.

குடும்பங்கள் பல சேர்ந்து வாழத் தொடங்கியபோது சமுதாய வாழ்க்கை உருவானது. இவ்வாழ்வில் சில நன்மைகள் இருந்தன. சில அல்லல்களும் தோன்றின. சேர்ந்து வாழ்ந்தபோது பாதுகாப்பு இருந்தது. இல்லாதவரது போதாமையை மற்றொருவர் வழங்கி இட்டு நிரப்ப முடிந்தது. இவற்றால் ஏற்பட்ட மகிழ்ச்சியால் அவனது சமுதாய வாழ்வு தொடர்ந்தது.

எனினும், சமுதாய வாழ்வால் தனதும், தனது குடும்பத்தினதும் சுதந்திரம் பாதிக்கப்பட்டதை அவன் உணர்ந்தான். மற்றவர்களுக்கு ஏற்படும் துயரத்தைத் தீர்க்கவேண்டிய சுமை ஏற்பட்டதையும் அவன் அல்லலாகக் கருதினான். இந்நிலையிலிருந்து விடுபட ஒரேயொரு வழிதான் இருந்தது. அதுதான் ஊர் முழுவதையும் ஒரு குடும்பமாகக் கருதி வாழும் முறை. இம்முறையில் ஓர் ஒப்பற்ற இன்பம் இருப்பதை உணர்ந்த அன்றுதான், மனிதன் தன்னை விலங்கிலிருந்து வேறுபடுத்தி வாழத்தொடங்கினான்.

(i) குடும்ப அமைப்பின் மூலம் மனிதன் பழகிக் கொண்ட நற்பண்புகள் எவை?

(ii) இவ்வமைப்பில் அவன் பெற்றுக்கொண்ட புதிய அனுபவங்களாக இங்கு கூறப்பட்டுள்ளவை யாவை?

(iii) சமுதாய வாழ்வின் நன்மைகள் யாவை ?

(iv) இச்சமுதாய வாழ்வினால் ஏற்பட்ட அல்லல்கள் எவை?

(v) மனிதன் 'விலங்கு வாழ்க்கை'யிலிருந்து எப்போது வேறுபடத் தொடங்கினான்?

**5.** நீண்ட காலமாக நூலகம் இல்லாதிருந்த தமது பிரதேசத்தில் நூலகமொன்றை அமைப்பதற்கான தீர்மானத்தை சாந்திபுரம் பிரதேச சபையினர் நிறைவேற்றியுள்ளனர். அப்பிரதேசத்திலுள்ள அறிவொளி சனசமூக நிலையத்தின் செயலாளர் ப.அன்பழகன் என உம்மைக் கருதிக்கொண்டு, பிரதேச சபையின் முடிவைப் பாராட்டி, பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியதாக, அப்பிரதேச சபையின் தவிசாளருக்கு **100** சொற்களில் **கடிதம்** ஒன்று எழுதுக.

- நூலகம் இல்லாத பிரதேசத்தில் நூல்களை வாசித்து அறிவை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லாமை
- நூலகத்தால் பிரதேசத்திற்கு ஏற்படவுள்ள நன்மைகள்
- நூலகம் அமைக்க முன்வந்தமைக்குப் பாராட்டும் நன்றியும்

**அல்லது**

இன்றைய பெருந்தொற்றுக் காலத்தில் தனிமனித சுகாதாரத்தைப் பேணுவதனூடாக, பாதுகாப்பான சூழலைக் கட்டியெழுப்ப முடியும். எனவே, இப்பேரிடர்வேளையில் ஒவ்வொருவரையும் அவதானமாக இருக்கக்கோரி பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியதாக, சாந்திபுரம் இளைஞர் மன்றத்தின் சார்பில் **100** சொற்களில் ஒரு விழிப்புணர்வுத் **துண்டுப்பிரசுரம்** எழுதுக.

- முகக்கவசம் அணிதல்
- அடிக்கடி கைகளைக் கழுவிக்கொள்ளுதல்
- சமூக இடைவெளியைப் பேணி, கடமைகளில் ஈடுபடுதல்

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**22 T III**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Ord. Level) Examination, 2020

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය III
**தமிழ் மொழியும் இலக்கியமும் III**
Tamil Language and Literature III

පැය දෙකයි
**இரண்டு மணித்தியாலம்**
*Two hours*

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

**கவனிக்க:**

✳ அறிவுறுத்தல்களுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

✳ **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.

✳ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை தருக.

(i) "தண்டாமரையுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டுகம்"

(அ) 'தண்டேன்' என்பதைப் பிரித்து எழுதுக.

(ஆ) இங்கு 'மண்டுகம்' எனக் குறிப்பிடப்படுவது யாது?

(ii) "அது கிடக்க எடுத்துக்கொண்டு வா தபாற்தந்திக் கட்டுக்களை"

(அ) இவ்வாறு கூறியவர் யார்?

(ஆ) அதனை அவர் யாருக்குக் கூறினார்?

(iii) "ஓடி மண்டை பற்றிப் பரபரெனும் பாரில் பிண்ணாக்கு முண்டாம்."

(அ) 'பிண்ணாக்கு' என்ற சொல் இரு பொருள்பட வருமாற்றை விளக்குக.

(ஆ) இதில் இடம்பெற்றுள்ள அணி யாது?

(iv) "கண்ணார் அல்லாமேல் ஆணை உன்னை அடையாட்டிக் காட்டுப்பள்ளி"

(அ) இங்கு 'ஆணை' என்பது எதனைக் குறிப்பிடுகிறது?

(ஆ) 'அடையாட்டி' என்ற சொல் குறிக்கும் பொருள் யாது?

(v) "அறந்தானே என்கின்ற அயல் நின்றாள்தனை நோக்கி,
ஐய அன்பின் நிறைந்தாளை உரை"

(அ) 'அயல் நின்றாள்' எனக் குறிப்பிடப்படுபவள் யார்?

(ஆ) 'ஐய' என விளிக்கப்படுபவன் யார்?

(vi) "தனித்து நின்றும் சத்தியத்தால் தலை நிமிரும் மனிதன்.
தற்பெருமை கொள்ளாது தலை தாழும் அறிஞன்."

(அ) மனிதன் தலை நிமிர்வது எதனால்?

(ஆ) 'தலை தாழும்' என்பதன் உட்கருத்து யாது?

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(vii) "பார்ப்பனர், மொழிபெயர் தேயத்தார், யவனர், புலம்பெயர் மக்கள் தமிழ் மக்களோடு இனிதாக வாழ்ந்து வந்தார்கள்."

(அ) இதனூடாக வெளிப்படும் தமிழ்மக்களுடைய மனப்பான்மை யாது?

(ஆ) 'மொழிபெயர் தேயத்தார்' என்ற தொடர் யாரைக் குறிக்கிறது?

(viii) "பூத்தஜோதி வதனம் திரும்புமேல் புலனழிந்தொரு புத்துயிரெய்துவேன்."

(அ) காதலியின் முக அழகு எவ்வாறு விபரிக்கப்படுகிறது?

(ஆ) காதலியின் பார்வையால் கவிஞர் தான் அடைந்த மகிழ்ச்சியை எவ்வாறு விபரிக்கிறார்?

(ix) "வயிரம் எனும் சுடுநெருப்பை மிகமூட்டி வளர்க்கின் உயர் வரைக்காடு என்ன
செயிர் அமரில் வெகுளிபொர சேர இரு திறத்தேமும் சென்று மாள்வோம்."

(அ) இங்கு 'வரை' எனப்படுவது யாது?

(ஆ) 'இருதிறத்தேமும்' எனச் சுட்டப்படும் இரு பகுதியினரும் யாவர்?

(x) "அரவ நெடுங்கடல் ஆடை அவனி எல்லாம்."

(அ) இங்கு 'அரவம்' என்பதன் பொருள் யாது?

(ஆ) பூமி எதனை ஆடையாக அணிந்துள்ளது?

(20 புள்ளிகள்)

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு

(அ) இப்பாடல் உணர்த்தும் நீதி யாது?

(ஆ) புலவர் தாம் கூற விரும்பிய கருத்தைப் புலப்படுத்தக் கையாண்ட உதாரணத்தை விளக்குக.

(ii) பங்கப் பழனத் துழுமுழவர்
புலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர்
தனைக் கொண்டெறியுந் தமிழ்நாடா
கொங்கர்க் கமராபதியளித்த
கோவே யிராச குலதிலகா
வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே

(அ) இங்கு தமிழ்நாடனின் வீரம் எவ்வாறு விபரிக்கப்பட்டுள்ளது?

(ஆ) தலைவியின் ஆற்றாமை எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது?

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(iii) ஆழப் புதைந்த
தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த
அப்பனின் சிதைமேல்
ஏழை மகனும்
ஏறி மிதித்து
இங்கெவர் வாழவோ
தன்னுயிர் தருவன்
என்னே மனிதர்
இவரே இறந்தார்க்கு
இங்கோர் கல்லறை
எடுத்திலர்! வெட்கம்
தன்னை மறைக்கத்
தானோ அவ்விறைவனும்
தளிர் பசும் புல்லால்
தரை மறைத்தனனோ!

(அ) தோட்டத் தொழிலாளரின் உழைப்பு எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றது?

(ஆ) 'வெட்கம் தன்னை மறைக்கத்தானோ அவ்விறைவனும் தளிர் பசும்புல்லால் தரை மறைத்தனனோ!' என்ற தொடர் மூலம் கவிஞர் கூற விழைவது யாது?

(iv) "சமூகத்திலுள்ள பலர் தத்தம் இயல்புக்கேற்ற இலட்சியங்களைக் கடைப்பிடித்தொழுகுவதாலோ, கடைப்பிடித்தொழுக முயலுவதாலோதான் உலகம் இனிமை தருகின்றது. இலட்சியமில்லையேல் உலகு இனிமை தராது. பண்பில்லாதவனுக்கு அவன் பெற்ற அறிவும் துன்பமாம். ஈகையில்லாதவனுக்கு அவன் பெற்ற செல்வமும் துன்பமாம். பிற நற்பேறுகளும் இவ்வாறே. சமூகத்தை உருவாக்கி அதனை அழகு செய்து இன்பப்பயன் காணச்செய்கின்ற இலட்சியம் சமூகமாகிய உடலுக்கு உயிராக அமைந்துள்ளது."

(அ) அறிவின் இலட்சியம் யாது? செல்வத்தின் இலட்சியம் யாது?

(ஆ) இங்கு காணப்படும் **இரண்டு** உருவகங்களையும் எடுத்துக்காட்டுக.

(v) "மூத்தம்மா என்ற மகாராணியின்கீழ் இருப்பதில் என்றுமில்லாத கர்வம் சுரந்தது. எனது சிரசில் சௌந்தர்ய கிரீடம் சூடியதான மிதப்பு. விலாவிரண்டிலும் சிறகுகள் முளைத்து காற்றினிலே எம்பத் தொடங்கி விட்டேன். என் மிதமிஞ்சிய 'பயந்தாங்கொள்ளி' பட்டத்தை நான் எரித்தாயிற்று. நெஞ்சினுள் கலர் கலராய் வண்ணப் பூக்கள் காடாய் அடர்ந்தன."

(அ) இதைக் கூறுபவரின் குதூகல உணர்வு எவ்வாறு சித்திரிக்கப்படுகிறது?

(ஆ) மூத்தம்மாவின் ஆளுமை இங்கு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

(20 புள்ளிகள்)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**3.** **தத்தைவிடு தூது** என்ற இலக்கியத்தில்,

(அ) காதலிமீது தலைவனின் காதல் உணர்வு

(ஆ) பெண்களின் அன்றைய சமுதாய நிலைமை

ஆகியன புலப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

**குற்றாலக் குறவஞ்சி** யில்,

(அ) மலைச் சிறப்பு

(ஆ) நாட்டுச் சிறப்பு

ஆகியன விபரிக்கப்படுமாற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

**4.** **அற்றைத் திங்கள்** என்ற நாடகத்தில்

(அ) நாடிழந்த பாரி மகளிரின் சோகம்

(ஆ) பறம்புமலை மீதான கபிலரின் பற்று

என்பன புலப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

**எது நல்ல சினிமா** என்ற கட்டுரையில்,

(அ) ஆரம்ப காலத் தமிழ்ச் சினிமாவில் நாடகத்தின் செல்வாக்கு

(ஆ) நல்ல சினிமாவின் பண்புகள்

ஆகியன விபரிக்கப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக. (15 புள்ளிகள்)

**5.** **பேதைமை** என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) பேதையர் இயல்பு

(ஆ) பேதையர் அடையும் கேடு

**6.** **நாட்டார் பாடல்கள்** என்ற பகுதியில்,

(அ) உழவரது வேண்டுதல்

(ஆ) அரிவி வெட்டுதல் பற்றிய சித்திரிப்பு

ஆகியன இடம்பெறுமாற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

**7.** **கம்பியூட்டர்** என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) கதாசிரியருக்கு கம்பியூட்டர் பற்றிய முன் அனுபவமின்மை

(ஆ) அந்த அனுபவமின்மையோடு தொடர்புபடுத்தி தனது அமெரிக்க அனுபவத்தை விபரிக்கும் விதம்

(10 புள்ளிகள்)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/